RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s618

OPEN ACCESS

# பெரியபுராணத்தில் வேளாண் பண்பாடு

**கோ. உமா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா.

# Agriculture in 'Periyapuranam'

**G. Uma [a, *]**

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem-636011, Tamil Nadu, India.

* Corresponding Author: umatamil25@gmail.com

Received: 28-10-2021
Revised: 23-04-2022
Accepted: 13-05-2022
Published: 17-07-2022

Check for updates

**ABSTRACT**

Sekkizhar, very religious in nature, was deeply affected by Kulothunga Cholan II's reading of 'Sivaga Chinthamani'. He advised the king to give up his pursuit of blasphemous sensual literature and instead return to the lives of Saiva sages celebrated by Sundaramurthy Nayanar and Nambiandar Nambi. The king then invited Sekkizhar to describe the lives of the Saiva sages in a great poem. After studying the lives of the sages, and collecting the data, he wrote poetry in the thousand-pillared hall of the Chidambaram temple. The legend has it that the Lord gave the first phase of the first verse to Sekkizhar as a divine voice from heaven, proclaiming "Ulahelam" (the whole world). This work is considered to be the most important effort of the reign of Kulothunga Cholan II. Although Sundarar and Nambiandar Nambi composed an earlier literary composition of Saiva sages, it was considered to epitomise the high standards of Chola culture. For, the highest order of literary style, the Periyapuranam is regarded as the fifth Veda in Tamil, and immediately takes its place as the twelfth and last book of the Saiva catalogue. It is considered one of the masterpieces of Tamil literature and is considered to commemorate the golden age of the Cholas. The Periyapuranam, also known as Thiruthondapuranam, is that which explains about 63 Nayanmars (saintly devotees) and 9 Thokaiyadiyaars (group of devotees). By telling their life story, the social culture of the Tamil people has also been explained. This review article deals with the life of the Nayanmars, especially the agricultural culture. Agriculture starts from planting, harvesting and giving rise to a soulful life. The agricultural system consists of the steps of ploughing, planting, irrigation, fertilizing, fencing, and conservation. This review highlights that these methods are derived from the lived experience of the culture.

**Keywords:** Agriculture, Landscaping, Plowing, Sowing, Fertilizing, Weeding, Preservation, Harvesting, Distribution, Products.

## முன்னுரை

பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் பக்தி மார்க்கத்தைக் கூறும் நூல் என்றாலும் தமிழக மக்களின் பண்பாடு, பழக்க வழக்கம், தொழில், வணிகம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் என அழைக்கப்படும் திருத்தொண்டர் புராணம் அனைத்து சமூகத்தினரையும் பற்றி விளக்குகிறது. அந்தணர் (12), வணிகர் (6), வேளாண் (13), ஆதிசைவர் (4) குயவர், வேடர், இடையர், ஏகாலியர், பரதவர், சாலியர், பாணர், சாணார், மாமாத்தியர் ஆகிய அனைத்து வகுப்பினரின் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைக்கின்றது. அவ்வகையில்

பெரியபுராணத்தில் காணப்படும் வேளாண் விளைப்பொருட்கள் பற்றிய செய்திகள் இளையான்குடி மாறன் நாயனார் புராணத்தில்; மிகுந்து காணப்படுகிறது.

பெரியபுராணத்தின் தொடக்க பகுதியானத் 'திருமலைச் சருக்கம்' இடம்பெற்றுள்ளது. இதில் தமிழகத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் பொன்னி ஆற்றின் வளமையை விளக்கிச் செல்கையில் வேளாண்மைக் குறித்த செய்திகள் இடம்பெறுள்ளது. வேளாண்மை தொழிலை 'மேற்கொள்ள அடிப்படையான நில அமைப்பை பெரியபுராணத்தின் வாயிலாக அறியலாம்.

## வேளாண்மை நில அமைப்பு

பண்டைத்தமிழகத்தில் அறியப்பட்ட நிலவகைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனபகுக்கப்பட்டன. அவற்றில் உழவுத் தொழிலான வேளாண்மையை மேற்கொள்ள மருதநில அடிப்படையாக அமைந்துள்ளது.

"நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்

குளத்துக்கு அணியென்ப தாமரை"

என்ற நான்மணிக்கடிகை வரிகளால் நிலத்துக்கு அழகு சேர்ப்பது மருத நிலமாக கருதப்படும் வயலும் வயல் சார்ந்த பகுதிகளில் விளையும் நெல்லும் கரும்பும் என விளக்குவதிலிருந்து அறியமுடிகிறது (Balasubramanian, 2004). பெரியபுராணம் முழுமையும் சோழ வள நாட்டைமையப் படுத்தி அமைந்துள்ளது. அதற்கு ஆதாரமாக நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் சோழ நாட்டு வளத்தைப் பற்றி திருநாட்டுச் சிறப்பு பகுதியில் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

பெரும்பான்மையான நில அமைப்பு மருதநில அமைப்பை எடுத்துரைக்கிறது. "வேந்தன் மேய தீம்புனல் உலகம் என்று தொல்காப்பியர் தொல்காப்பியம் பொருள் - 5 நூற்பாவில் உரைப்பதில் 'புனல்நாடு' என்பது மருத நிலமான வயலும் வயல் சார்ந்த பகுதியாகும். 'உழவே உலகத்து அச்சாணி' (குறள்.1032) என வள்ளுவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. உலக உயிர்கள் இயங்குவதற்கும் உழவே அடிப்படை.

முல்லை நிலத்துக்கும் நெய்தல் நிலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தது. இங்கு மருத மரங்கள் அதிகம் நின்றதாலே இது மருதநிலம் எனப்பெயர் பெற்றது. "நில உலகை காத்து இரட்சிக்க கூடிய உமையம்மை சிவபெருமானைத் திருகாஞ்சி நகரின்கண் வழிபட்டார். அதனால் எட்டுழக் கீராழி நெல்லைப் பெற்று தமது பிள்ளையாகிய வேளாளரிடம் கொடுத்தார். அவர்கள் அதனை வித்தாகக் கொண்டு பயிர் செய்து உலகிலுள்ளவர்க்கு உணவளித்தனர். அதனால் வேளாளர் மிகவும் புகழ் பெற்று விளங்கினர்" என்ற கருத்தை சேக்கிழார் நாயனார் புராணம்

"உமைதிருச் சுடகங்கையாற் கொடுக்க வாங்கி

உழவுதொழிலாற் யுலகு மெய்யாது

நமதுகொழு மிகுதியொடு வளர்க்கும் வேளாண்

தலைவர்பெரும் புகழுவதிற் றழைத்த தன்றே"

பாடல் விளக்குகிறது (Kanthaiya, 1970). உழவினை தொழிலாக கொண்டமைவது ஐவகை நிலங்களை எடுத்துரைக்கும் நிலங்களில் மேற்கொள்ளப்பட்டாலும் அவை உழவோடு அமைந்த துணைமைத் தொழிலாகவே கருதப்படுகின்றது.

உழவு அல்லது வேளாண்மை, விவசாயம், கமம் என்பன உணவிற்காகவும் பிறபயன்பாட்டிற்காகவும் பயிர்செய்வதாகும். மருத நிலத்தின் விளைப் பொருள்களாக நெல்லும் கரும்பும் கருதப்படுகிறது.

"அவனிமிசை மழைபொழிய உணவு மல்கி

அனைத்துயிருந் துயர்நீங்கி அருளினாலே

புவனமெல்லாம் பொலிஉவய் தூங்கலாம்"

எனப் பாடுவதிலிருந்து மழைவளத்தால் உணவுப் பொருள்கள் பெருகி அனைத்துயிர்களும் துன்பம் நீங்கி நன்மை பெறும் என்பது அறியமுடிகிறது (Manickam, 2012). மழைப் பொழிவால் பெருகின்ற நீரினைக் கொண்டு பெருமளவு நிலப்பரப்பு பயிர் செய்யப்பட்டன. "சோழநாடு சோறுடைத்து" எனும் பழமொழிக் கேற்ப மருதநில நெல்வயல்கள் வளமையுடன் இருந்தன.

"வைப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்

கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் பீரத்து"

என்ற புறநானூறு பாடல் விளக்குகிறது (Balasubramanian, 1968; Avvai Duraisamy Pillai, 2005). விளைப்பொருட்களில் பல்வேறு தானியங்களையும் நெல் அறுவடைக்குப்பின் விளைவித்தனர். அதற்கு கள் அல்லாத மற்ற பருவங்கள் ஏற்புடையதாக இருந்தன.

"ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையும் நாளின்கண்

தூங்குதுளி முகிற் குலங்கள் கரந்துபெயல் ஒழிகாலை"

என்பதில் முன்பனிக் காலத்தின் சிறப்பை விளக்குகிறது (Balasubramanian, 1968). கார் ஒழித்த பருவங்களில் தன் விளைச்சலைப் பெருக்க பல்வேறு தானியங்களை விளைநிலங்களில் பயிரிட்டனர்.

"புன்புலச் சீறூர் நெல்வினையாதே

வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்

இரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன"

என புறநானூறு விளக்குகிறது (Balasubramanian, 1968). கார் காலமும் குளிர்காலமும் தவிர மற்ற பெரும் பொழுதுகளில் வெய்யிலின் தாக்கம் மிகுந்திருக்கும். அக்காலங்களில் மழை பெய்யாததால் சேமித்து வைத்த நீர்நிலைகளிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி வேளாண்மை மேற்கொண்டனர். மருத நிலத்தின் நீர் நிலைகளாகக் குளம், தடாகம், பொய்கை, ஓடை, கிணறு, நீர்ப்படைகள் அமைந்திருந்ததை பெரியபுராணம் விளக்குகிறது.

"வெம்மைதரு வேனிலிடை வெயிர்வெப்பந் தணிப்பதற்கு

மும்மை நிலைத் தமிழ் விரகர்" (அ, மாணிக்கம் உரை)

என்ற பாடல்வழி விளக்குகிறது. அதோடு அல்லாமல் வெப்ப மிகுதியால் அனைத்துயிர்களும் துன்பப்பட்டாலும் தன்னிலை தவறா மேன்மை உடையவராய் உழவர்கள் இருந்தனர் என்பதை

"............... அறநெறித்

தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்

தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய

மிக்க செல்வத்து வேளாண் தலைமையார்"

என பெரியபுராணம் வழிஅறியமுடிகிறது (Manickam, 2012). உழுது பயிர் செய்வதற்கு ஏற்ற நிலமாக மருதநிலம் கருதப்பட்டது. குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை போன்ற நானிலங்களிலும் பலவாறு உணவுப் பொருட்களை பயிரிட்டதை பெரியபுராணம் எடுத்துரைக்கிறது.

## வேளாண்மை செயல் முறைகள்

வேளாண்மை எனும் சொல் வள்ளுவரால் பலவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. அவரது பார்வையில் வேளாண்மை என்பது 'உழவு' அல்ல; மாறாக உழவோடு தொடர்புடைய பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பினை விளக்குவதாக எடுத்துரைக்கின்றார்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு"

என்று குறள் விளக்குகிறது (Parimelalhagar, 2002). பசிபிணியைப் போக்க வல்லதான வேளாண்மை செயல்முறைகள் உழுதல், விதைத்தல், உரமிடல், களைப்பறித்தல், பாசனம் செய்தல், பாதுகாத்தல், அறுவடை போன்றவற்றை கொண்டமைந்துள்ளதை பெரியபுராணம் வழி அறியமுடிகிறது.

## உழுதல்

உழுதல் என்பது நிலத்தைக் கிளைத்தல், கிண்டுதல் என்று விளக்குகிறது. இதனை வள்ளுவர்,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப்படும்"

என விளக்குகிறார் (Parimelalhagar, 2002). சேக்கிழார் இக்கருத்தினை கூறுமிடத்து

"நீற்றலர்பே தொளிறெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்

சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்

ஆற்றலவன் கொழுகிழித்த சால்வழிப்போய் அசைந்தேறிச்

சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங் கமலம்"

என்ற வரிகளால் விளக்குகிறார் (Manickam, 2012). எருமைகள் பூட்டப்பட்ட ஏர்க்கலப்பை வயல் வெளிகளைக் கொழுவினால் பிளந்து கொண்டு செல்லும்படி உழுதனர் என்றுரைப்பதிலிருந்து அறியமுடிகிறது.

"உழுது பரம்படிச்சு கன்னியிளமானே

உழுகுர அண்ணே நீயே கடலயமீனே"

என்ற ஏர்ப்பாட்டும் "பூமி மயங்கப் பலவுழுது வித்தி"

என்ற புறநானூற்றுப் பாடலும் உழும் முறைகளை தெளிவுபட விளக்குகிறது (Manoharan, 2012; Balasubramanian, 2004).

## விதைத்தல்

விளைச்சலும் வேற்ற நல் வித்துகளைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்தினர். அதற்காக முதற்போக விளைச்சலில் முதலில் தோன்றிய கதிர்களை தெரிவு செய்து அவற்றை பாதுகாத்து வைத்து பயன்படுத்தினர். புன்செய், நன்செய் நிலங்களுக்கு ஏற்ற பயிர்களை விதைத்து விளைவித்தனர்.

"மலரும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி

எல்லை எங்கணும் இறவுளர் ஏனல்முன் வினைக்கும்

பல்பெரும்புனல் பயின்வன படர்சிறைத் தொகை"

என்ற பெரியபுராண வரிகள் குறிஞ்சி நிலத்தில் திணைப் பயிரை விதைத்தனர் என்பதை விளக்குகிறது (Manickam, 2012). இவையல்லாமல் மென்நிலங்களில் விதைப்பு முறையானது நாற்றங்கால்களில் விதை விதைத்துப் பின் நாற்றைப் பறித்து நடுவர் என்பதை,

"மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்

சேறு செய்பவர் செற்நெல்லின் வெண்முளை சிதறி

நாறு வளர்ப்பவர் பறிப்பவர் நடுபவரான

வேறு பல்வினையுடைப் பெருங்கம்பலை மிகுமால்”

என்ற பெரியபுராண பாடல் எடுத்துரைக்கிறது (Manickam, 2012).

## உரமிடலும் களைப்பறித்தலும்

“மண்ணில் உள்ளதை மண்ணுக்கே வழங்கும்”

தொழில்நுட்பம், உயிர்களின் தோற்றம், வளர்ச்சி, அழிவு, பின் தோற்றம்” என்னும் சுழற்சியை உடையது. இதனை உணர்ந்த வேளாண்மையாளர்கள் கால்நடை, கழிவாகிய தொழுஉரமும், இலைத்தழையாகிய தழையுரமும் பயன்படுத்துவதை மரபாகக் கொண்டிருந்தனர். உரமிடுதலைப் போன்று களைப்பறித்தலும் விளைச்சலைப் பெருக்குவதற்கு உறுதுணையாக அமையும் என்பதை

“பைங்கூழ் களை கட்டதனொடு நேர்”

வள்ளுவர் விளக்குகிறார் (Parimelalhagar, 2002). நெல் நாற்றின் முதல் இலை சுருள் விரிந்து காட்ட அப்பருவத்தைக் கண்டு உழவர் இதுதான் களைப் பறிக்கும் தருணம் என்று களையைக் களைந்து செல்வர் உழவர்குல பெண்கள் என்பதை,

“மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள் விரியக்

கண்டுழவர் பழங்காட்ட களைகளையுங் கடைசியர்கள்”

என்ற பெரியபுராண பாடலின் வழிஅறியமுடிகிறது (Manickam, 2012).

## பாசன முறைகள்

வேளாண் விளைப் பொருட்களை விளைவிக்க நீர்பதமானது இன்றியமையாததாகிறது. நீர்ப்பாசனம் பெரும்பாலும் வாய்க்கால் அமைத்து பாய்ச்சப்பட்டது. புன்செய் நிலங்களுக்கு குளம், ஆறு போன்ற நீர் நிலைகளிலிருந்து வாய்க்காலில் நீரைப்பிரித்து பாய்ச்சி பாசனம் செய்து வந்தனர்.

“மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வாளைகள் பாய என்னும் வாக்கால் கைந்நிறைந்த ஒத்தலுத்துக் கலைப்பதிகம் கவுணியர் கோன் பாடுங்காலை”

எனப்பாடுவதிலிருந்து அறியமுடிகிறது (Manickam, 2012).

## பாதுகாத்தல்

வேளாண்மைச் செய்து விளைப்பொருட்களைப் பெறுவதற்கு பயிரைப் பாதுகாத்தல் இன்றியமையாததாகி பூச்சிகள், விலங்குகள், பறவைகள், நோய்கள் போன்றவற்றிலிருந்து காத்து விளைச்சலைப் பெற்றனர். பகல் இரவு பொழுதுகளில் விலங்குகளிடமிருந்து ஆண்களும் பகல் பொழுதில் பறவைகளிடமிருந்து பெண்களும் விளைப்பொருட்களைப் பாதுகாத்ததாக,

“பண்காஞ்சி இசைபாடும் பழனவேலிப்

பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்”

என்ற பெரியபுராண பாடல்வழி அறியலாம் (Manickam, 2012). நன்கு வளர்ந்த பயிர்களை விளைச்சலைத் தரக்கூடிய நேரம்வரை பணியை உழவினை மேற்கொள்ளும் வேளாளர் மேற்கொண்டிருந்தனர் என்பதை,

“பைங்கூழ் விளைவின்கண் போற்றான் உழவும்

உள்ளன போலக் கெடும்” (திரிகடுகம்)

என்ற திரிடுகம் பாடல் அறிவுறுத்துகிறது.

## அறுவடை

பக்குவமாக உழுது பயிரிட்டு பாதுகாத்த வேளாண் விளைப்பொருட்களை அவை முற்றி வரும் அறுவடைத்தருணம் பார்த்து அறுவடைப் பணிகளை மேற்கொள்வர். நன்செய் பயிர்களான நெல், ஆரியம் போன்றவற்றை அரிவாள் கொண்டு அறுத்து ஆண்களும் பெண்களும் சேர்ந்து களம் சேர்ப்பர். "களமடித்துப் போர் குவிக்கும் உழவர் கூட்டம்" என்ற பொது மொழியும் இருக்க காணலாம்.

அறுவடைச் செய்து வைத்த நெற்கட்டுகளை அளவாக சாய்த்து பெரிய எருமைக் கூட்டங்களை வலமாக வரசெய்வர். எருமைகள் மிதித்து சுற்றிய பின் வைக்கோளைப் பிரித்து காயவைத்து பசுக்கூட்டங்களுக்கு உணவாக்க பதபடுத்து வைத்துக் கொள்வர். நெல்மணிகளை தூற்றி உலர்த்தி நெற்குவைகளில் சேமிப்பர் என்பதை,

"சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு காய்த்துக்

காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்"

என்றடிகள் விளக்குகிறது (Manickam, 2012). வைக்கோலை ஆடுமாடுகளுக்கு உணவாக அளித்தனர். அவற்றை வீடுகளுக்கு கூரைமேயவும் பயன்படுத்திக் கொண்டனர்.

## பெரிய புராணத்தில் விளைப்பொருட்கள்

பெரிய புராணம் சைவ இலக்கியமாகத் தோன்றியிருப்பினும் வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ளும் வேளாளரின் வாழ்க்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகிறது. பெரியபுராணத்தில் கூறப்படும் சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றில் வேளாண்மைசார் செயல்பாடுகள் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. சைவ அடியார்களின் காலகட்டத்தில் அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் காணப்பட்ட விளைப்பொருட்களாக நெல், கரும்பு, வாழை, பாக்கு, திணை, வரகு, சாமை, காராமணி, அவரை, மிளகு, வெற்றிலை, மா, பலா போன்றன காணப்பட்டன.

தமிழர்களின் முக்கிய உணவு பொருளாக கருதப்படுவது நெல்மணிகளாகும். இவை கழனி, வயல் என்று குறிப்பிடப்படும் நன்செய் நிலங்களில் பயிரிடப்படுகிறது. நெல்மணிகளை உடைய வயல்பரப்பு திருமகளை ஒத்து அமைந்திருப்பதாக பெரியபுராணம்

"பொன்னிவளந் திருநாட்டுப் புறம்பணை சூழ்

திருப்பதிகள் பலவும் போற்றிச்

செந்நெல் வயந் செங்கமல முகமலரும்"

என்ற பாடல் விளக்குகிறது (Manickam, 2012). மலைநெல், மூங்கில் நெல், காலி நெல், செந்நெல், கார்நெல், வெண்ணெல், ஐவனநெல் போன்ற நெல்வகைகள் இருந்ததாக பெரியபுராணம் எடுத்துரைக்கிறது.

## கரும்பு

நீர்நிலைகள் மிகுந்திருக்கும் நிலப்பரப்புகளில் கரும்பு பயிரிடப்படுகிறது. கரும்பு கழைக் கரும்பு, கழனிக் கரும்பு, கார்க்கரும்பு போன்ற வகைகள் காணப்படுகின்றன. நெல்லைப் போல கரும்பும் வளத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது.

"சங்கங்கள் வயல் எங்கும் சாலிகழைக் கரும்பெங்கும்

கெங்கெங்கும் நிறைகமலக் குளிர்வாசத் தடம் எங்கும்"

என்ற பெரியபுராண பாடல் கழைக் கரும்பை பற்றி விளக்குகிறது (Manickam, 2012).

இவையல்லாது கழுகு, தென்னை, வாழை போன்ற நன்செய், பயிர்கள் விளைவித்ததை விளக்குவதாக பெரியபுராணம் அமைந்துள்ளது.

## முடிவுரை

பசி என்னும் நோயைப் போக்ககூடியது வேளாண்மையாகும். அவ்வேளாண்மைக்குரிய ஐவகை நிலங்களும் பல்வேறு விளைச்சலை வழங்க கூடியதாக அமைந்துள்ளது. “உழுதுண்டு வாழ்வார்” தன்பசியைப் போக்கி கொள்வதோடு அல்லாமல் உலக உயிர்களின் பசியைப் போக்குபவர்களாக உள்ளனர் என்பதை பெரியபுராணம் வழி அறிந்துகொள்ள முடிகிறது. வேளாண்மையின் பொருள் ‘ஈகை’ என்பதாகவும் ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்’ பண்பினையும் எடுத்துரைக்கிறது. எப்பொருளை விளைவிப்பதற்கும் ஏற்ற வகையில் நிலத்தை பண்படுத்துதலும் உரிய தருணத்தில் விதைத்தலும் பராமரித்தலும் அறுவடை செய்தலும் மட்டுமல்லாது விதைத்தலும் பராமரித்தலும் அறுவடை செய்தலும் மட்டுமல்லாது அடுத்த பருவத்திற்கான விதைகளை சேமித்தலுமாகிய நடவடிக்கைகளை வரன்முறைப்படி பின்பற்றியது அனைத்து மனித இனத்துக்குமாகிய வாழ்க்கை நெறியை எடுத்துரைக்கிறது. அக்காலத்திற்கு மட்டுமல்லாது எக்காலத்திற்கும் பொருந்துவனவாகும்.

## References


Avvai Duraisamy Pillai, S., (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Balasubramanian, K.V., (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Kanthaiya, M.C., (1970) Sekkilar's Periya Puranam, The Jaffna Co-Operative Tamil Books, Jaffna, Srilanka.

Manickam, A., (2012), Panniru Thirumuraikal, Vardhamanan Pathippagam, Chennai, India.

Manoharan, (2005) nattupura velanmai, Kavya Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2012) Pathinan Keilkanakku Nulgal, Manivasagar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License